**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.13/2020 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஜோதிபாண்டியன் |
| Father Name | திரு.எஸ்.பத்மநாபன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **16.03.2026.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல வேண்டும் என்று எனக்கு ஒரு வருடத்திற்கு முன்பு எங்கள் நிறுவனத்தில் சொன்னார்கள். அதன் பிறகு தான் வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அதற்கு முன்பே எனக்கு தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் நிறுவனம் சார்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில், எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் எந்த நபரின் பெயரை குறிப்பிட்டு அனுப்பப்பட்டது என்று எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனம் சார்பாக இந்த வழக்கை நிர்வாக இயக்குநர் திரு.வேலாயுத பாண்டி தாக்கல் செய்துள்ளார். எங்கள் நிறுவனம் தனியார் நிறுவனம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் வேலாயுத பாண்டி மற்றும் அவரது மனைவி சிவகாமி ஆகிய இருவருக்கும் பங்கு உள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நிர்வாக இயக்குநர் வேலாயுத பாண்டிக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.49 வழக்கறிஞர் அறிவிப்பு திரு.யுவராஜ் என்பவரால் எங்கள் நிறுவனம் சார்பாக அனுப்பப்பட்டுள்ளது. இந்த வழக்கை தொழிற்சாலை மேலாளர் எம்.ரவிச்சந்திரன் என்பவர் எங்கள் நிறுவனத்திற்காக தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் உள்ளது என்றால் சரிதான். யுவராஜ் என்பவர் எங்கள் நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து வந்தார். அவர் வேலையை 2022ம் ஆண்டில் ராஜினாமா செய்து சென்றுவிட்டார். ரவிச்சந்திரன் என்பவர் எங்கள் நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து வருகிறார். அவர் ஏன் இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரவில்லை என்று எனக்கு தெரியாது. நான் வாதி நிறுவனத்தில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு எங்கள் நிறுவன நிர்வாகம் அதிகார கடிதம் வழங்கியுள்ளது. வா.சா.ஆ.52 அதிகார கடிதம் எனக்கு 02.01.2026–ம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரம் அதற்கு முன்பே எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட எந்தவொரு ஆவணத்திலும் 02.01.2026–ம் தேதிக்கு முன்பு நான் கையொப்பம்

செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்தததில்லை. என்னுடைய முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.59 ஆவணங்களிலும் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேன். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்கு அதிகாரம் வழங்குவதற்கு எங்கள் நிறுவனத்திற்கே அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் இருந்தால் தான் எனக்கு எங்கள் நிறுவனம் அதிகாரம் வழங்குவதற்கு அதிகாரம் உள்ளதா என்று தெரிய வரும் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் இயக்குநர் அல்லது செயலாளர் மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றாலும், அவர்கள் தான் சாட்சியம் அளிக்க முடியும் என்றாலும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. ( வழக்கை தாக்கல் செய்வதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது என்பது பற்றியோ, இந்த வழக்கை தாக்கல் செய்தவருக்கு அதிகாரம் இல்லை என்பது பற்றியோ, பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் ஆட்சேபனை எதுவும் எழுப்பாத நிலையில் இந்த கேள்வி கேட்க முடியாது என்ற வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை பதிவு செய்யப்படுகிறது.)

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.